Translation copy

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 2784807 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாயா" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ……………………

මගේ අංකය / எமது இல. / My No. } ED/03/56/22/2017

දිනය / திகதி / Date } 2017.06. 28

சகல தேசிய பாடசாலை அதிபர்களுக்கும்

**பொதுக் கல்வித் துறையில் விடய ஆய்வு கலாச்சாரத்தினை விருத்தி செய்தல்.**

இலங்கை கல்வி நிர்வாக சேவையிலும், கல்வி சமூகத் துறையிலும் பிரபல்யமடைந்துள்ள விடய ஆய்வு முறைமையினை (Case Study), பாடசாலை கல்வியின் பண்புசார் விருத்தியின்பால் உபயோகிப்பதற்கு, அகில இலங்கை ரீதியில் வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்களினது திறமைகளை இனங்கண்டு அவற்றை விருத்திசெய்தல், ஆசிரியர்களின் வகிபங்கினது புத்துருவாக்கம், பாடசாலை முகாமைத்துவத்தினது புதியநோக்கு, பாடசாலையினது பல்வேறு செயற்பாடுகளுடன் தொடர்புடைய புத்துருவாக்கங்கள் போன்ற கல்வியுடன் தொடர்புபட்ட யாதாயினும் ஓர் துறையில், தெரிவுசெய்யப்பட்ட நிறுவனம், ஓர் நிகழ்வு அல்லது ஓர் நபர் தொடர்பில் விடய ஆய்வினை மேற்கொள்ள முடியும். இது தொடர்பில் திறமை, அனுபவம் மற்றும் ஆர்வமுடைய ஆசிரியர்கள், அதிபர்களிடமுள்ள ஆய்வு தொடர்பான அறிவு மற்றும் அனுபவத்தினை தேசிய மட்டத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றிற்கு கைகொடுத்து உதவுவதற்குமான வேலைத்திட்டமொன்று கல்வி அமைச்சின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளையினால் அமுல்படுத்தப்படவுள்ளது.

தங்களது பாடசாலையில் இது தொடர்பில் ஆர்வமுடைய ஆய்வாளர்கள் தமது ஆய்வு முன்மொழிவினை 500 சொற்களுக்கு மேற்படாதவாறு தயாரித்து 2017.07.14ம் திகதி அல்லது அதற்கு முன்னர் **பணிப்பாளர், ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பலவத்த, பத்தரமுல்ல** எனும் முகவரிக்கும் பிரதியினை j.tillakaratne@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைப்பதற்கு வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு